## கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா பிறந்த நாள்:

# மொழியுரிமை - சமூக நீதியை உயர்த்திப் பிடிப்பதில் தங்களது வலிமையான குரல் மக்களாட்சி உணர்வை வெளிப்படுத்துகிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஆக. 4 -**

**கர்நாடக மாநில முதலமைச்சர் சித்தராமையா அவர்களின் பிறந்த நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்து வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:**



கர்நாடக மாநில முதலமைச்சர் சித்தராமையா அவர்களுக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துகள்.

மொழியுரிமைகளைக் காப்பதிலும், சமூகநீதியை உயர்த்திப் பிடிப்பதிலும் தங்களது வலிமையான குரல் உண்மை யான கூட்டாட்சியியல் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய மக்களாட்சி உணர்வை வெளிப்படுத்துகிறது. இன்றைய இந்தியாவில் இக்கொள்கைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்ற வகையில், தமிழ்நாட்டு மக்களும் கர்நாடக மக்களும் அவற்றை நிலை நிறுத்துவதில் ஒன்றிணைந்து நிற்க வேண்டும்.

தாங்கள் தொடர்ந்து வலிமையோடும் மகிழ்ச்சியோடும் நீண்ட ஆயுளோடும் திகழ விழைகிறேன்.

இவ்வாறு முதல்வர் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.




இராணிப்பேட்டை ஜி.கே.மில்லினியா ஓட்டலில் நடைப்பெற்ற "ஓரணியில் தமிழ்நாடு(வடக்கு மண்டலம்) ஆய்வுக் கூட்டம் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் , வடக்கு மண்டல பொறுப்பாளர் எ.வ.வேலு தலைமையில் நடந்தது. கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, சுற்றுலா துறை அமைச்சர் ராஜேந்திரன், துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், எம்.எல்.ஏ.க்கள், தொகுதிப் பார்வையாளர்கள், தொகுதி தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## பீகார் மாநிலத்தவரை

# தமிழ்நாட்டில் வாக்காளர்களாக சேர்ப்பது சட்ட விரோதம்!

சென்னை, ஆக. 4 -

பீகார் மாநிலத்தவரை தமிழ்நாட்டில் வாக்காளர்களாக சேர்ப்பது சட்ட விரோதம் என, முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் குற்றம் சாட்டியுள்ளார். தேர்தல் ஆணையம் தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி மாநிலத்தின் தேர்தல் சூழலை மாற்ற முயற்சிப்பதாகவும் அவர் விமர்சித்துள்ளார்.



காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான ப.சிதம்பரம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பீகாரில் 65 லட்சம் வாக்காளர்கள் வாக்குரிமை இழக்கப்படும் அபாயத்தில் உள்ள நிலையில், தமிழ்நாட்டில் 6 லட்சத்து 50 ஆயிரம் பேரை வாக்காளர்களாக சேர்ப்பது என்பது சட்டவிரோதமானது என்று கூறியுள்ளார்.

பீகார் தொழிலாளர்களை நிரந்தரமாக இடம்பெயர்ந்தவர்கள் என்று அழைப்பது புலம் பெயர்ந்த தொழிலாளர்களை அவமதிப்பதாகும் என்று ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார். மேலும், தமிழக வாக்காளர்கள் தங்கள் விருப்பப்படி ஒரு அரசை தேர்ந்தெடுக்கும் உரிமையில் தலையிடும் செயல் என்றும் அவர் கூறியுள்ளார்.

புலம்பெயர்ந்த பீகார் தொழிலாளி, தங்கள் மாநில சட்டமன்ற தேர்தலில் வாக்களிக்க ஏன் செல்லக் கூடாது, சத் பூஜை பண்டிகையின்போது, புலம் பெயர்ந்த தொழிலாளி பீகாருக்கு திரும்பவில்லையா என்று ப.சிதம்பரம் கேள்வி எழுப்பியுள்ளார்.

வாக்காளராக பதிவு செய்யப்பட வேண்டிய ஒருவருக்கு நிலையான, நிரந்தர சட்டப்பூர்வ வீடு இருக்கவேண்டும், புலம் பெயர்ந்த தொழிலாளிக்கு பீகாரில் நிரந்தர முகவரி உள்ள நிலையில், அவரை தமிழ்நாட்டில் எப்படி வாக்காளராக பதிவு செய்ய முடியும் என்று அவர் வினவியுள்ளார். தேர்தல் ஆணையம் தனது அதிகாரங்களை துஷ்பிரோயகம் செய்து, மாநிலங்களின் தேர்தல் தன்மை மற்றும் முறைகளை மாற்ற முயற்சி செய்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த அதிகார துஷ்பிரயோகத்தை அரசியல் ரீதியாகவும், சட்டரீதியாகவும் எதிர்த்து அனைவரும் போராடவேண்டும் என்றும் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# விவசாயிகளுக்கு நிஜபட்ஜெட்டை அளித்து ; அள்ளிக் கொடுத்தோம்!

## ஒகேனக்கல்லில் ஆடி பெருக்கு விழாவில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேச்சு!

தருமபுரி, ஆக. 4 -

ஒகேனக்கல்லில் ஆடி பெருக்கு விழாவை - தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் துவக்கி வைத்தார்.

தருமபுரி மாவட்ட சுற்றுலாத் துறை சார்பில் ஒகேனக்கல்லில் மூன்று நாள் நடைபெறும் ஆடி பெருக்கு விழாவின் முதல் நாளில் தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் பேசியதாவது:



எடப்பாடி பழனிசாமி சுந்தரா ட்ராவல்ஸ் பேருந்தில் பயணம் செய்கிறார்,அது ஒரு காமெடி பீஸ்,மேலும் அன்புமணி உரிமை மீட்போம் என சொல்கிறார். எந்த உரிமையை மீட்க போகிறார் என்று தெரியவில்லை.அது ஜி.கே.மணிக்கு தான் தெரியும். எதை மீட்க போராடுகிறார் என்று, என்னத்த செஞ்சிங்க, என்று கேட்டு கொண்டே இருக்கிறார். எவன் செய்தாலும், நாங்க தான் செய்தோம், நாங்க தான் செய்தோம் என்று சொல்வதை தவிர வேறு எதையும் அவர்கள் செய்ததில்லை. இட ஒதுக்கீடு கேட்பதோடு சரி,ஆனால் இன்றைய தினம் அதற்கான சட்டத்தை கொண்டு வந்தது தி.மு.க. தான்.

பா.ம.க. நிழல் பட்ஜெட் போட்டார்கள், நாங்கள் நிஜ பட்ஜெட்டை போட்டு ஆட்சி நடத்தினோம்.

விவசாயிகளுக்கு நலத் திட்டங்களை அள்ளி கொடுத்தோம். இவர்கள் இட ஒதுக்கீடுகள் கேட்டு போராட்டம் நடத்தி, பேருந்தை நிறுத்தினார்கள்.

மரத்தை வெட்டினார்கள்.ஆனால் அப்போதைய அ.தி.மு.க. ஆட்சியில் எம்.ஜி.ஆர். அதையெல்லாம் கண்டு கொள்ளவில்லை. துப்பாக்கி சூடு நடத்தியதில் 21 பேர் உயிரிழந்தனர், ஆனால் யாரும் கேள்வி கேட்கவே இல்லை. தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் முத்த மிழறிஞர் கலைஞர் அவர்கள், ராமதாஸ், வீர பாண்டியாரை அழைத்து பேசி வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுத்தார்.

என்னவோ தெரியவில்லை. இப்போது அன்புமணி மக்கள் உரிமையை மீட்க போகிறேன் என்று சொல்கிறார். என்ன உரிமையை மீட்க போகிறார் அப்பாவிடம் உரிமையை கேட்க போகிறாரா?

இவ்வாறு அமைச்சர் பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ஆ.மணி, எம்.எல்.ஏ ஜி.கே.மணி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ். மகேஸ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, கோட்டாச்சியர் காயத்ரி, முன்னாள் எம்.எல்.ஏ மற்றும் முன்னாள் மாவட்ட செயலாளர்கள், தடங்கம்.சுப்ரமணி, பி.என்.பி.இன்ப சேகரன், மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழகத்தினர், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## சட்டப்பேரவையிலிருந்து வெளிநடப்புச் செய்வதையே வாடிக்கையாகக் கொண்ட எதிர்க்கட்சித் தலைவர்

# எடப்பாடி பழனிசாமி தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது என்பதே தெரியாமல் இருக்கிறார்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் காட்டமான அறிக்கை!

**சென்னை, ஆக.4 -**

**தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது என்பதே அறியாதவராக இருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி என குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சாதனைகளை விளக்கி அமைச்சர் தா.மோ.அன்பசரன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு :-

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி கோவில் பட்டியில் 1.08.2025 அன்று தீப்பொட்டி உற்பத்தியாளர்கள், கடலை மிட்டாய் உற்பத்தியாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் லைட்டரை தடை செய்ய அ.தி.மு.க. முயற்சி எடுக்கும் எனவும், கடலை மிட்டாய் உற்பத்திக்கு தேவையான உதவிகளை செய்யும் எனவும், தெரிவித்துள்ளார்.

10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் தீர்க்கப்படாத இந்த பிரச்சனை குறித்து, கழக அரசு பொறுப்பேற்றப்பின் தமிழக முதல்வர் அவர்கள் தீப்பொட்டி உற்பத்தியாளர்களின் கோரிக்கையை ஏற்று லைட்டர்கள் இறக்குமதிக்கு தடைவிதிக்குமாறு 08.09.2022 அன்று, மாண்புமிகு ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சருக்கு கடிதம் எழுதினார், தமிழக அரசின் தொடர் அழுத்தத்தின் காரணமாக ஒன்றிய அரசு 29.06.2023 அன்று ரூ.20க்கும் குறைவான Pocket Lighters Gas Fuel & Nonrefillable ஆகியவற்றிற்கு இறக்குமதி செய்ய தடை விதித்தது. இருப்பினும், மற்ற நாடுகளில் இருந்து லைட்டர்கள், உதிரிபாகங்களாக, இந்தியாவுக்குள் சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்டு, லைட்டர்களாக பொருத்தப்பட்டு மீண்டும் விற்பனை செய்யப்பட்டு வந்தது. இதனால் தீப்பெட்டி தொழிலின் உள்நாட்டு வர்த்தகம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இது குறித்து மீண்டும் ஒன்றிய அமைச்சர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம் 13.10.2024 அன்று பாக்கெட் லைட்டர்களின் பாகங்கள், gas fuelled, nonrefillable or refillable lighters (சிகரெட் லைட்டர்கள்) ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கு கட்டுப்பாடு விதித்து அறிவித்துள்ளது.

ரஷ்யா, உக்ரைன் போர், அமெரிக்கா பொருளாதார கட்டுபாடு காரணமாக பொட்டாசியம் குளோரைடு இறக்குமதி தடை செய்யப்பட்டது, தீப்பெட்டி தொழில் பாதிப்பு அடைந்த போது தமிழக அரசு துரிதமாக செயல்பட்டு சென்னை பெட்ரோ கெமிக்கல் மூலம் மொத்தமாக கொள்முதல் செய்து தீப்பெட்டி தயாரிப்பாளர்களுக்கு வழங்கப் பட்டது. இந்த பிரச்சனைகள் குறித்து சட்டமன்ற கேள்வி நேரத்தின் போதும், முன்னாள் அமைச்சர் அ.தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர் கடம்பூர் ராஜு கொண்டு வந்த சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீதும் பலமுறை பதில் அளித்துள்ளேன். 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியின் அலங்கோலத்தால் சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்வதையே வாடிக்கையாக கொண்ட எதிர்கட்சி தலைவருக்கு கழக அரசின் நடவடிக்கை எல்லாம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.



உலகம் அறிந்த கோவில்பட்டி கடலை மிட்டாய், உற்பத்தியாளர்களின் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டு பிப்ரவரி 24ஆம் தேதி கோவில்பட்டி பகுதியில் கடலை மிட்டாய் குறுங்குழுமம் அமைக்கப்படும் என அறிவித்தார். அதன்படி ரூ.6.42 கோடி அரசு மானியத்துடன், ரூ.7.13 கோடி மதிப்பீட்டில், கடலை மிட்டாய் உற்பத்திக்கான பொது வசதி மையம் அமைக்க, சமூக நல மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. வரும் ஏப்ரல் மாதத்திற்குள் இத்திட்டம் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

தொழில் வளர்ச்சியில் முதன்மை மாநிலமாக உள்ள தமிழ்நாட்டில் ஒவ்வொரு திட்டமும் கடைக்கோடி மக்களுக்கு சென்றடையும் வண்ணம் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. MSME துறைக்கு கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க ஆட்சியில் ரூ.3 ஆயிரத்து 617 கோடியே 62 லட்சம் மட்டுமே நிதி ஒதுக்கப்பட்ட நிலையில் கழக அரசு பொறுப்பேற்றபின் முதல்வர் அவர்கள், இந்த 5 ஆண்டுகளில் மட்டும், ரூ. 6 ஆயிரத்து 626 கோடி நிதி ஒதுக்கி 10 ஆண்டு கால அ.தி.மு.க ஆட்சியில் ஒதுக்கப்பட்ட நிதியை விட 2 மடங்கு நிதி வழங்கி MSME துறையை தூக்கி நிறுத்திய பெருமை நம் முதல்வருக்கு உண்டு. ஆட்சி பொறுப்பேற்று 4 ஆண்டு காலத்தில் 5 சுய வேலை வாய்ப்பு திட்டங்களின் கீழ். 2 ஆயிரத்து 57 கோடியே 90 லட்சம் மானியம் வழங்கப்பட்டு. 5 ஆயிரத்து 301 கோடியே 63 லட்சம் வங்கி கடனுதவி வழங்கி 63 ஆயிரத்து 14 புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது என்பதே தெரியாமல் எதிர் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி பேசி வருகிறார்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ. அன்பரசன் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ச.கு.வேலாயுதம் மேல்நிலைப் பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு உயர்மருத்துவ சேவை முகாமினை துவக்கி வைத்து, பார்வையிட்டார். உடன் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா இராஜேந்திரன், விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் பிரியங்கா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பொற்கொடி உட்பட பலர் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் மேல் பாப்பம்பாடி ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். அப்போது முகாமில் கை கால் பாதிக்கப்பட்டு மாற்றுத்திறனாளி என சான்று பெறுவதற்காக மனு செய்தவருக்கு உடனடியாக முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ முன்னிலையில் மருத்துவர்கள் பரிசோதனை மேற்கொண்டு தேர்வு செய்தனர்.
உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன், மாவட்ட கவுன்சிலர் அகிலா பார்த்திபன், வட்டார வளர்ச்சி அலுவலர் நடராஜன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.